ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

07.08.2025

1. வானவர்கள் கண்டு வியக்கும்
வள்ளல் தன்மை மிகுந்தநல்
ஞான சபையாம் பிரணவக் குடிலை
நம்பிவர மக்களுக்கும் மாற்றமாக

2. ஆகவே அற்புதம் புரிவேனென
அழைப்பு தந்து அரங்கன் யானும்
வகைபட விசுவாவசு ஆண்டு நள்ளி திங்கள்
வேதமான குருவார அருளாசி தன்னை

3. தன்னையே அருட்சுவடி வழி அருள்வேன்
தருமசாலை என என்று கருதி
மண்ணுலக மக்களே அலட்சியம் கருதா
மகான்கள் சூழ்ந்த ஆலயமாகக் கருதிவர

4. கருதிவர நம்பிக்கை வைத்துமே
கஷ்டங்கள் தீர வேண்டி வர
ஆறுமுகனாருடன் அரங்கன் யானும்
அருட்சோதி வழி அடையாளம் காணப்பட்டு

5. பட்ட துன்பங்கள் யாவும் விலகிட
பாதுகாப்பும் மேல் நிலைகள் தானும்
இட்டம் போல் சகல காரியங்களும்
எண்ணம்போல் தேறி வாழ்வர்

6. வாழ்வினில் தொடர்ந்து வந்துமே
வணங்கி வாராந்திர மாதாந்திர
ஊழ்வெல்லும் ஞானிகள் பூசை கலந்திட
உணருவர் அவரவர் பிறவி சூட்சுமம்

7. சூட்சுமம் இன்னும் பல விளங்கி
சுத்த சைவ நெறியில் திளைத்து
காட்சியாக வேண்டும் போதெல்லாம்
கந்தனை எந்தனை கண்டுத் தேறுவர்

8. தேறவே தன்னலம் கடந்துமே
தேவைக்கு மேலாக வரவுதனை
அறத்தின் வழி செலவிட்டுமே
ஆனந்தமும் மன அமைதியும் அடைவர்

9. அடையவே அரங்கன் வகுத்த
அன்னதான சேவை வழியில்
தடையின்றிப் பொருளுதவி செய்து
தருமவானாய் தவசிகளே போற்றும்

10. போற்றும் ஞானவானாய் சிறந்து
பெரும்பேறு இந்த கலியினில்
ஆற்றல்பட அரங்கனென் ஆசிபட
அணுகுவார் அனைவரும் அடைந்து

11. அடைந்து உலகை மாற்றும்
அரங்கனென் ஞானப்படைகளாக
இடரின்றிப் பெருகி இனிதே
இவ்வுலகை ஞானஉலகாக மாற்றுவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி